செ.வெ.எண்: 49 / மார்ச் 30.03.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று (30.03.2016) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

வாணிபம் செய்வதற்காக இந்திய தேசம் வந்த ஆங்கிலேயர்கள், இந்திய தேசத்தை அடக்கி ஆட்சி செய்யத் தொடங்கிய காலக்கட்டத்தில் ஆங்கிலேயர்களின் அடக்குமுறைகளை எதிர்த்து விடுதலைப் போராட்டத்திற்கு வழிவகை செய்ததில் இராமநாதபுரம் சீமையில் ஆட்சி புரிந்து கணக்கிலடங்காத அறப்பணிகளும், தமிழ்வளர்ச்சி பணிகளும் மேற்கொண்ட சேதுபதி மன்னர்கள் வம்சத்தைச் சார்ந்த ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் பங்கு முக்கியமானதாகும். ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் 30.03.1760 அன்று பிறந்தார். குழந்தைப் பருவத்திலேயே இராமநாதபுரம் சீமையின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு, தற்போதைய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயிலில் மூன்றாம் பிரகாரத்தை கட்டி முடித்தவர் ஆவார். தமிழ்நாடு அரசு மூலம் விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் விடுதலைப் போராட்டங்களை கௌரவிக்கும் வகையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 8 அடி உயரத்தில் முழு திருவுருவ வெண்கலச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதலைப் போராட்ட வீரர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.இரா.ராம்பிரதீபன், வட்டாட்சியர் திரு.மாரி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.ம.கயிலைச்செல்வம் (செய்தி), திரு.நா.விஜயகுமார் (விளம்பரம்) உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**